**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 91/2025**

**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திருமதி. லட்சுமி** | **Caste** | : | |
| **Husband's Name** | : | **திரு.மணி** | **Calling** | : | **பிளாஸ்டிக் வியாபாரம்** |
| **Village** | : | **காமராஜபுரம்** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **70** |
| | | | **Dated** | : | **23.09.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

**எதிரி ஆஜர்.**

அ.சா. 1 (பட்டியல் சாட்சி 2), **திருமதி. லட்சுமி** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>முதல் விசாரணை :-</u>

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து பிளாஸ்டிக் வியாபாரம் செய்து வருகிறேன். எனக்கு ஆஜர் எதிரியைத் தெரியாது. இந்த வழக்கில் காயம்பட்ட பாலமுருகன் எனது மகன். தற்போது அவர் உயிரோடு இல்லை. சுமார் 16 வருடங்களுக்கு முன்பாக எனது மகன் பாலமுருகன் இரத்த காயத்துடன் வீட்டிற்கு வந்தார். நான் காயம் எவ்வாறு ஏற்பட்டது என்று கேட்டதற்கு, முத்துராமன் தன்னை தாக்கியதாகச் சொன்னார். மேற்படி முத்துராமனும் இறந்துவிட்டார். முத்துராமன் மனைவியோடு பேசியதால், எனது மகனை சந்தேகப்பட்டு முத்துராமன் தாக்கியதாக சொன்னார். எனது மகனுக்கு தலை மற்றும்

கையில் இரத்த காயம் இருந்தது. பின்னர் எனது மகனை ஆட்டோவில் ஏற்றி திண்டுக்கல் அரசு மருத்துவனையில் சிகிச்சைக்காக சேர்த்தேன். அங்கு போலீசார் வந்து விசாரணை செய்து எனது மகனிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து எனது மகனுடையதுதான். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Taken down by me/before me in open Court on 23.09.2025 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

(Sd/..) Tmt.V. Deepa,
Chief Judicial Magistrate,
Dindigul.